**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**STC No.339/2022 Date:19-09-2024**

வா.சா.1 – பிரபாகரன், த/பெ.செங்கோட்டையன்,

(எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த தேவைக்காக எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றால் குடும்ப தேவைக்காக கேட்டார். குறிப்பிட்டு, என்ன குடும்ப தேவை என்று என்னிடம் எதிரி சொன்னாரா என்றால் வெளியே கொடுக்க வேண்டிய பாக்கி உள்ளதாகவும், குடும்ப தேவை என்றும் சொன்னார். காசோலை தொகை ரூ.4 லட்சம் எனக்கு பெரிய தொகை என்றால் சரிதான். நான் எதிரியை தவிர வேறு யாருக்காவது பணம் கொடுத்துள்ளேனா என்றால் பிரபு என்பவருக்கு ரூ.6 லட்சம் தொகை கொடுத்துள்ளேன். வேறு யாருக்காவது பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

2) பிரபு என்பவரிடம் காசோலை வாங்கியிருந்தேனா என்றால் வாங்கிருந்தேன். பிரபு என்பவர் பணத்தை கொடுததுவிட்டு காசோலையை பெற்றுகொண்டாரா என்றால் இல்லை, அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல செய்துள்ளேன் என்றால் ராசிபுரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரபு என்பவர் எந்த வருடம் என்னிடம் கடன் வாங்கினார் என்றால் சரியாக ஞாபகமில்லை, எதிரிக்கு கடன் கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக கொடுத்திருப்பேன். பிரபு என்பவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் ரமேஷ், என்பவரின் மூலம் தெரியும். ரமேஷ், என்பவர் எங்கு வசிக்கிறார் என்றால் மல்ல சமுத்திரத்தில் குடியிருக்கிறாார்.

3) எனது மாத வருமானம் என்ன என்றால் விவசாயத்தை சார்ந்துள்ளதால் வருடத்திற்கு ரூ.5 லட்சம் வரும். எனது சொத்தின் மதிப்பு என்ன என்றால் 11 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. எதிரியின் மாத வருமானம் என்ன என்றால் அரசு ஆசிரியராக உள்ளதாக மட்டும் தான் தெரியும், மாத வருமானம் தெரியாது.

எதிரியின் சொத்து மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்னிடம் எப்போது முதன்முறையாக ரூ.4 லட்சம் பணத்தினை கடன் கேட்டார் என்றால் கடன் கொடுப்பதற்கு 1 மாதத்திற்கு முன்னதாக கேட்டார்.

4) ரூ.4 லட்சம் பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்றால் எனது தென்னை மரதோப்பினை குத்தகைக்கு விட்டதன் மூலமாக வந்த பணம் ஆகும். எந்ததேதியில் குத்தகைக்கு தென்னை மரதோப்பினை விட்டேன் என்றால் தேதி ஞாபகமில்லை. எதிரிக்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு தூாரம் இருக்கும் என்றால் சுமார் 35-40 கி.மீ தூாரம் இருக்கும். எதிரி எனக்கு உறவினரும், நெருங்கிய நண்பரும் இல்லை என்றால் சரிதான். காசோலையை யார் பூர்த்தி செய்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்முன்னிலையில் கையொப்பம் மட்டும் தான் செய்தார், யார் மற்ற விவரங்களை பூர்த்திசெய்தது என்று எனக்கு தெரியாது.

5) எதிரிக்கு பணம் கொடுத்தது குறித்து என்னை தவிர வேறு யாருக்காவது தெரியுமா என்றால் தெரியாது. நான் வட்டி தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு எத்தனை வங்கிகளில் வங்கி கணக்குகள் உள்ளது என்றால் ICICI, Indian Overseas bank ஆகிய வங்கிகளில் கணக்குகள் உள்ளது. எதிரிக்கு கடந்த 26-09-2022 ம் தேதி கடன் கொடுத்ததாக சொல்லும்போது அப்போது எனது வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் குறைந்தபட்ச தொகை தான் இருந்திருக்கும், பணம் இருப்பில் இல்லை. தற்போது, எனது வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருக்கும் என்றால் ரூ.500 முதல் ரூ.1000 இருக்கும்.

6) எதிரிக்கு வட்டிக்கு கடன் கொடுத்தேனா என்றால் இல்லை. காசோலை எதற்காக திருப்பப்பட்டது என்றால் போதிய பணமில்லை என திருப்பப்பட்டது. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்னர் எதிரியை நான் எத்தனை முறை பார்த்திருப்பேன் என்றால் 4-5 முறை பார்த்திருப்பேன். வழக்கு காசோலையில் பிரபாகரன் என்ற பெயர் ஒரு மையிலும், கையொப்பம் ஒரு மையிலும் உள்ளது என்றால் சரியல்ல. நான வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. சொத்து வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை, விவசாய நிலம் மட்டும் தான் உள்ளதால் செலுத்தவில்லை.

7) எதிரிக்கு ரூ.4 லட்சம் பணத்தினை கொடுத்ததாக சொல்லும்போது எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் ரூ.500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். எதிரிக்கு ரூ.4 லட்சம் பணத்தினை கொடுத்ததாக சொல்லும் பணத்தினை வங்கியில் இருந்து எடுத்தேனா என்றால் பணத்தினை வீட்டில் தான் வைத்திருந்தேன். அக்பர் ஷெரிப் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்னை பார்க்கவும் இல்லை, கடன் வாங்கவும் இல்லை என்றும், அக்பர் ஷெரிப் என்பவரிடம் எதிரி காசோலையை கொடுத்திருந்தார் என்றும், அந்த காசோலையை நான் மோசடியாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) எதிரியை நான் நீதிமன்றத்தில் தான் முதன்முறையாக பார்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படியான கடன் எதுவும் கொடுக்க வேண்டியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அக்பர் ஷெரிப் என்பவரை எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)-Prabhakaran

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.